***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 17/2017**

**P.W.1 திரு.பக்ருதீன் த/பெ.அப்துல் ரகுமான் நாள் – 23.03.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1ம் வாதியின் தகப்பனாருக்கு 1972ம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால் சரிதான். 1ம் வாதியின் தகப்பனார் 1971ம் ஆண்டே அரசுப்பணிக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அரசுப்பணி சென்னையில் தான் இருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு 1964ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . 1966ல் எனது தாயாரின் அறிவுறுத்தலின்படி எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியை குடும்பத்தில் இருந்து வெளியேற்றிவிட்டார் என்றால் இல்லை, எனது தகப்பனாருடன் தான் இருந்தார். திருமணத்திற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி அவரது மாமியார் வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் இல்லை, எங்கள் வீட்டில் தான் இருந்தார். 1ம் பிரதிவாதி எந்த வருடம் வரை எங்கள் வீட்டில் குடியிருந்தார் என்றால் எனது அப்பா இறக்கும் வரை இருந்தார். எனது தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு எங்கு குடியிருந்தார் என்றால் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இரண்டு வீடு தள்ளி குடியிருந்தார். அது யார் வீடு என்றால் யார் வீடு என்று எனக்கு தெரியாது . எனது வழக்குரையில் 7ம் பத்தியில் 1ம் பிரதிவாதி அவரது மாமியார் வீட்டில் தான் குடியிருந்தார் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் அது யார் வீடு என்று எனக்கு தெரியாது, ஆனால் வேறு வீட்டில் குடியிருந்தார். 1ம் பிரதிவாதி அவரது மாமியார் வீட்டில் தான் குடியிருந்தார் என்றும் , நான் வழக்கிற்காக எனது தகப்பனார் இறக்கும் வரை எங்கள் வீட்டில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் நடத்தி வந்த அஹமது ஸ்டோர் என்ற கடையை, எனது தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு 1ம்

வாதியின் தகப்பனார் அஹமது நடத்தி வந்தாரா என்றால் இல்லை . எனது தகப்பனாரின் இறப்பிற்கு பின்னிட்டு அந்த கடையை யார் நடத்தி வந்தார்கள் என்றால் எனது அண்ணன் ஷேக் மைதீன் நடத்தி வந்தார் . 1ம் வாதியின் தகப்பனார் தான் அந்த கடையை நடத்தி வந்தார் என்று வழக்குரையில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் அது தவறு தான். 1ம் பிரதிவாதி அவரது தகப்பனார் நடத்தி வந்த கடையை அவரது இறப்பிற்கு பின்னிட்டு கடையில் இருந்த 60 சவரன் நகைகளையும், கடையில் இருந்த பொருட்களையும், பணத்தையும், வீட்டில் இருந்த நகைகளையும், இரும்பு பெட்டியில் இருந்ததை எடுத்துச்சென்றுவிட்டதாக சொல்வதற்கு நானோ, எனது தாயாரோ அல்லது 1ம் வாதியின் தந்தையோ காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால் இல்லை. அதுபோன்று எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் 1ம்பிரதிவாதியின் மீது நானோ , எனது தாயாரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை பத்தி 8ல் எனது தகப்பனார் இறந்தவுடன் 1ம் பிரதிவாதி அவரது மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எங்களுக்கு எதுவும் தரவில்லை, அவரே எடுத்துச்சென்றுவிட்டார். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் சொத்தில் இருந்து எந்த பொருளையும் , எந்த சொத்தையும் எடுத்துச்செல்லவில்லை என்றால் சரியல்ல . நான், எனது சகோதரர்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். இஸ்லாம் மத கோட்பாட்டின்படி வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான் . இஸ்லாம் மதத்தின்படி கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை எங்கள் மதத்தில் பின்பற்றப்படுவதில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . கூட்டுக்குடும்ப உறவுமுறை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான் . கூட்டுக்குடும்ப உறவுமுறை பற்றி எனது வழக்குரையில் குறிப்பிட்டிருந்தால், அதுபற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சகோதரி எனது தகப்பனாரின் சொத்துக்களில் அவருக்குரிய பாகம் கோரி மாவட்ட உரிமையியல்

நீதிமன்றத்தில் அ.வ.எண்.18/2015 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சொத்து விவரமாக எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை காண்பித்துள்ளார்கள் என்றால் ஒரு சில சொத்துக்களை மட்டும் தான் காண்பித்துள்ளார் , அனைத்து சொத்துக்களையும் காண்பிக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும் , எனது தகப்பனாருக்கு என்ன சொத்துக்கள் பாத்தியமோ, அவைகளை தான் காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கில் அந்த சொத்துக்கள் எனக்கு தான் பாத்தியம் என்று கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . அந்த வழக்கில் எனது சகோதரி சவுராபீவி என்பவருக்குரிய பங்கை ஒப்புக்கொண்டு கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். எனது சகோதரி முகமது பீவிக்கும், எனது தகப்பனாரின் தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு பணம் கொடுத்துவிட்டேன் என்றால் கொடுக்கவில்லை . 2ம் பிரதிவாதி முகமது பீவிக்குரிய பாகத்தை எனது தகப்பனாரின் சொத்தில் ஒரு பகுதியை ரூ.10,00,000/- 18.03.2013ம் தேதி விற்பனை செய்துவிட்டு கொடுத்தார் என்றால் அவ்வாறு கொடுத்ததை 2ம் பிரதிவாதி வாங்க மறுத்துவிட்டார். மேற்படி தொகையை கொடுப்பதற்காக உடையாளிப்பட்டியில் எனது தந்தைக்கு சொந்தமான 6.34 ஏக்கர் சொத்து கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . மேற்படி தொகையை நான் தான் கொடுத்தேனா என்றால் நான் தான் கொடுத்தேன், வாங்க மறுத்துவிட்டார். 6.34 ஏக்கர் சொத்து எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது , சேக் மொய்தீன் தான் விற்றார் . நான் சொல்வது தவறு என்றும் , வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . ரூ.10,00,000/- கொடுக்கப்பட்ட குறித்தும், அதனை வாங்க மறுத்துவிட்டார் என்பது குறித்தும் எனது வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை . மேற்படி சொத்தை விற்றதில் ரூ.2,50,000/- அதிகமாக என்னிடம் உள்ளது என்றும், அதை மற்ற பங்குதாரர்களுக்கு கொடுப்பதில் இருந்து மறைக்கவே 1ம் பிரதிவாதி விற்பனை

செய்ததாகவும், அதை 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கச்சொன்னதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் கொடுத்ததால்தான் சவுரா பீவி என்பவரையும், 2ம் பிரதிவாதியையும் இந்த வழக்கில் வழக்கு தாக்கல் செய்யும்போது சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு தான் 2, 3, 4 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் தான் தங்களுக்கு சொத்து வேண்டுமென்று சொல்லி இந்த வழக்கில் சேர்ந்து கொண்டார்கள். எனது தகப்பனாரின் கடைக்கு பின்பகுதியில் நான்கு கடைகள் கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த நான்கு கடைகளையும் 1ம் பிரதிவாதி தான் கட்டினார் என்றால் இல்லை, அந்த கடைகளில் முன்தொகை வாங்கி கட்டினார். அந்த நான்கு கடைகளுக்கான வாடகையையும் எனது தாயார் உயிருடன் இருக்கும் வரை வாங்கி வந்தார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு ஏற்கனவே திருமணமாகி யாகூப் என்ற மகன் உள்ளார் என்றால் தான். அவர் தான் அஹமது ஸ்டோர் கடையை எனது தாயாருக்கு நிர்வகித்து வந்தார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எந்தெந்த தேதிகளியில் யார் யாரிடம் கிரயம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களுக்கான அசல் ஆவணங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் வசம் தான் உள்ளது என்றால் சரிதான். அவர் கிரயம் பெற்ற சொத்துக்களுக்கு நாளதுதேதி வரையில் அவரது பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரது பெயரில் உள்ள சொத்துக்களுக்கு அவர் தான் வரி செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவருக்குரிய சொத்துக்களில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதியும், மின் இணைப்பு கோருவதற்கான அனுமதியும் பெற்றிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் கிரயம் பெற்ற சொத்துக்களில் யார் யாருக்கு வாடகைக்கு விட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் தான் வாடகை பத்திரங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு வரி விதிப்பு அவர் பெயரில்

ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான் . அந்த சொத்துக்களில் கூட்டு அனுபவமோ, கூட்டு வாடகையோ பெறவில்லை என்றால் சரிதான் . 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களில் நான் கூட்டு அனுபவம் இருந்ததாக சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . எனது அம்மாவின் இறப்பு வரை எனது அம்மா வாங்கினார், அதற்கு பின்பு 1ம் பிரதிவாதி தான் அனைத்து சொத்துக்களிலும் வாடகை வாங்கி வருகிறார் . எனது வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்துக்களுக்கும் எனது தாயார் தான் வாடகை வாங்கினார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . இந்த வழக்கில் நானும் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி செலுத்தியிருக்கும் நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும் , அந்த காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்துக்களில் கண்ட மதிப்பிற்கு தகுந்தவாறு நீதிமன்ற கட்டணம் செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல . 1ம் வாதியின் தகப்பனார் உயிரோடு இருக்கும் காலம் வரையில் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்கள் எனது தகப்பனாரால் பினாமியாக வாங்கப்பட்டுள்ளது என்று 1ம் வாதியின் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனது தாயார் உயிரோடு இருக்கும் காலம் வரையில் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்கள் பினாமியாக வாங்கப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . எனது தகப்பனார் இறந்து 40 ஆண்டுகள் கழித்து எனது தகப்பனார் பினாமியாக இருந்து 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கியுள்ளார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல . எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில் பினாமியாக சொத்துக்கள் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அவ்வாறு நான் கட்சி செய்வதே தவறானது என்றால் சரியல்ல.

**இக்கட்டத்தில் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.*

*Additional District Judge,*
*Pudukkottai.*